★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 25உ புதன் (10—10—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 26உ வியாழன் (11—10—56) [இதழ் 104

இடுகாட்டிலும் காட்டப்பட்ட வேற்றுமை ஒழிகிறது!

★

சென்னை, அக் 9—

பொதுப் பணத்தைக்கொண்டு நிர்வகிக்கப்படுகிற எல்லா இடுகாடுகளையும், இனி தாழ்த்தப்பட்டோர் உபயோகித்துக் கொள்ளலாம் என்றும், அவர்கள் உபயோகிப்பதைத் தடுப்பது சட்டப்படி தவறானதாகும் என்றும் சென்னை மந்திரி சபை இன்று முடிவு எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

முதலமைச்சர் கிளப்பிய ஒழுங்குப் பிரச்சினை

சட்டசபைத் தலைவர் நிராகரித்தார்!

பம்பாய் மாநில மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

துப்பாக்கிப் பிரயோகம்பற்றி விசாரிக்க மறுத்ததின் விளைவு

பம்பாய், அக். 9—

தம் மந்திரி சபைமீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதிக்கக் கூடாதெனக் கோரி பம்பாய் முதலமைச்சர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையை சபைத் தலைவர் நிராகரித்திருக்கிறார்.

பம்பாய் சர்க்கார், மாநில புனரமைப்பை ஒட்டி பம்பாயிலும், அகமதாபாத்திலும் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்து நீதிபூர்வமான விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை சர்க்கார் ஏற்க மறுப்பதால், அதன்மீது நம்பிக்கை இல்லை என்று சபேசரை உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதென சபைத் தலைவர் முடிவு கூறியிருக்கிறார்.

முன்பு கொண்டுவரப்பட்ட இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள், போதுமான ஆதரவின்மையால் நிராகரிக்கப்பட்டதைக் காரணமாகக் காட்டி, முதலமைச்சர் இந்தத் தீர்மானத்தையும் விவாதிக்கக் கூடாது எனக் கோரினர்; ஆனால் இந்தத் தீர்மானம், முன்னைய தீர்மானத்திற்கான காரணத்திலிருந்து வேறுபட்ட ஒன்று என்பதால், இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சபைத் தலைவர் கூறியிருக்கிறார்.

வரும் அக். 15 அல்லது 16-ம் நாளன்று தீர்மானம் விவாதத்திற்கு வரும்.

'சுதந்திர'த்திற்குப் பின்னர், பம்பாய் மாநில மந்திரிசபைமீது கொண்டுவரப்படும் முதல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இதுதான் என்று கூறப்படுகிறது.

காங்கிரஸ் சார்பில் 500 பெண்மணிகள்!

தேர்தலில் அபேட்சகர்களாக நிறுத்தப்படுவார்களாம்!

தற்போது 80 பெண்களே உறுப்பினர்களாக உள்ளனராம்

புதுடில்லி, அக். 9—

அடுத்த பொதுத் தேர்தலில் 14 புதிய மாநிலங்களின் சட்டசபைகளுக்கும் காங்கிரஸ் சார்பில் 500 பெண்மணிகள் அபேட்சகர்களாக நிறுத்தப்படுவார்களாம்!

புதிய மாநில சட்டசபைகளில் மொத்த இடங்களின் எண்ணிக்கை 3,114 ஆகும்.

தற்போதைய மாநிலங்களின் சட்டசபைகளில் 80 பெண்மணிகளே காங்கிரஸ் சார்பில் உறுப்பினர்களாக உள்ளனர்.

பஞ்சாப் சட்டசபையில் கூச்சல்—குழப்பம்!

பொது நிலங்களின் மசோதா மீது பேசுவதற்குத் தனக்கு ஒரு மணி நேரம் தேவையென்று பஞ்சாப் விதான சபை உறுப்பினர் பாலு என்பவர், சட்டசபைத் தலைவரின் அனுமதியைக் கோரினார்; ஆனால், சபைத் தலைவர் அவரது கோரிக்கையை நிராகரித்தார்.

ஆனால் அந்த உறுப்பினர், 'பேசித்தான் தீருவேன்' என்று பிடிவாதம் செய்யவே சபைத் தலைவர், சபையின் 'மார்ஷலைக்' கூப்பிட்டு, உறுப்பினரை வெளியேற்றுமாறு உத்திரவிட்டார்; இதன்மீது 'மார்ஷலு'க்கும் அந்த உறுப்பினருக்குமிடையில் சிறிது நேரம் மோதுதல் ஏற்பட்டது; உடனே சபையில், 'அமைதி', 'அமைதி' என்று கூச்சலும், பரபரப்பும் ஏற்பட்டது.

முடிவில், அந்த உறுப்பினர் தன் இடத்தில் அமர்ந்தார்; சட்டசபைத் தலைவரும் பாதுகாப்பு அதிகாரியை வெளியே அனுப்பிவிட்டார். அத்துடன் சட்டசபை கலைந்தது.

புதிய மாநிலங்கள் அமைந்த பின்னரே மீண்டும் சட்டசபை கூடும்.

உணவுப் பிரச்சினை தீர செய்ய வேண்டிய காரியம் ஒன்றுதானும்!

மந்திரி சுப்பிரமணியம் சவடால்!

சென்னை, அக் 9—

இப்போது உணவுப் பிரச்சினை தீர நடைபெற வேண்டிய காரியம் ஒன்றே ஒன்றுதானும்!

டில்லி சர்க்கார் ஏராளமான அரிசியை மாநிலத்திற்கு அனுப்பித் தந்தால், மாநில உணவுப் பிரச்சினை தீர்ந்துவிடுமாம்! மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

அதிகமான அரிசி ஒதுக்குமாறு டில்லியை வற்புறுத்தப்போகிறதாம் —சென்னை சர்க்கார்!

சென்னையின் பற்றாக்குறையைச் சரிக்கட்டும் அளவுக்கு டில்லி அரிசி ஒதுக்கினல், உணவுப் பிரச்சினையே இராதாம்!—மந்திரி சுப்பிரமணியம்தான் கூறியிருக்கிறார்.

ஆண்டொன்றுக்கு 2,50,000 டன் அரிசி பற்றாக் குறையாக உள்ளதாம்; இதனை டில்லி சர்க்கார் தருவார்களேயானல், எந்த விதக் கட்டுப்பாடும் விதிக்க வேண்டியிராது என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

உடனுக்குடன் அரிசி அனுப்பப்படுமாம்

திருச்சி, அக். 8—

இங்கு மத்திய அரசாங்கக் கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கும் சுமார் 1,44,000 மூட்டை நெல் அரைவையாலை ஆலைகளில் இன்று ஆரம்பமாகிவிட்டது. உடனுக்குடன் அரிசி நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படுமோம். இன்னும் 2 மாத காலத்தில் அரைவை முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அமைச்சர்கள் வருகின்றனர்— போகின்றனர்

மக்கள்படும் துயரம் நீங்குவதற்கு வழியில்லை

புதுடில்லி, அக். 9—

மத்திய சர்க்கார் அமைச்சர் கிருஷ்ணப்பா, சென்ற திங்களில் தென்னாடு முழுமையிலும் சுற்றுப் பயணம் செய்து, 'அரிசிப் பஞ்சம் ஏற்படாது; விலை குறைந்து வருகிறது; நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்; குறைந்த விலையில் அரிசி கிடைக்கும்; தேவையான கையிருப்பு இருக்கிறது' என்றெல்லாம் பேசிவிட்டுச் சென்றார்.

அரிசி விலையைக் கட்டுப்படியாக்கக்கூடிய நிலைக்குக்கொண்டு வரும்பொருட்டு, போதுமான கையிருப்பு வசதி செய்வதற்கும் அவர் மீண்டும் தென்னாட்டிற்கு வருகிறாராம்!

உணவுக் கட்டுப்பாடு?

டில்லி பரிசீலனை

புதுடில்லி, அக். 9—

உணவுப் பொருள்களை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்வதைக் கட்டுப்படுத்துவது குறித்து டில்லி சர்க்கார் தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறதாம்.

ஆனாலும், சர்க்காரிடத்தில் அந்தக் கட்டுப்பாட்டினை உடனடியாகத் திணிப்பதற்கு எந்தவிதத் தயாரிக்கப்பட்ட திட்டமும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

புதிய மகசூல் வந்ததும் நிலைமை தெளிவாகும் என்றும், அப்போது தேவையான நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

பங்கீடு, கட்டாயக் கொள்முதல், விலைக் கட்டுப்பாடு முதலியன கொண்டுவருவது பற்றி சர்க்காருக்கு எண்ணமே இல்லையாம்!

வடவரின் ஏகாதிபத்தியப் போக்கு நிலைநாட்டப் படுகிறது

நெய்வேலி, சேலம் திட்டங்களுக்கு கிழக்கு ஜெர்மனி உதவியை ஏற்க மறுப்பதேன்?

தென்னாட்டில் பெரும் தொழில் நிறுவுவதில் டில்லிக்கு கிஞ்சிற்றும் விருப்பமில்லை?

உற்பத்தி இலாகாவின் போக்கு, உள்நோக்கினை அம்பலமாக்குகிறது

தென்னாட்டில் கனரகத் தொழில்கள் எதுவும் நிர்மாணிக்கப்படுவதில் டெல்லிக்குக் கிஞ்சிற்றும் விருப்பமில்லை என்பதை நிலைநாட்ட மேலும் ஒரு சம்பவம் கிடைத்திருக்கிறது.

நெய்வேலி நிலக்கரியைத் தோண்டி எடுக்கவும், அதைப் பதப்படுத்துவதின் மூலம் இரும்புக் கனியை உருக்கக்கூடிய நிலக்கரியைத் தயாரிக்கவும், அதனைக் கொண்டு சேலம் இரும்புக் கனிகளை உருக்கி வார்க்கவும் ஆன திட்டங்களுக்குக் கிழக்கு ஜெர்மனி சர்க்கார், பொருளாதார—மற்றும் தொழில் நுட்ப உதவிகளைச் செய்யத் தயாராகயிருப்பதாகக் கிழக்கு ஜெர்மனி வர்த்தகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

உலகிலேயே பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் விவகாரத்தில் அதிகமான அனுபவ அறிவு பெற்றுள்ளவர்கள் என்ற முறையில் கிழக்கு ஜெர்மனி நிபுணர்கள் நெய்வேலியையும் சேலத்தையும் பார்வையிட்டுவிட்டு, நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக்கொண்டு சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவக்க முடியும் என்ற கருத்தைத் தெளிவாக அறிவித்ததை ஒட்டியே, வர்த்தகக் குழுவினர் டெல்லி சர்க்காரிடம் திட்டங்களுக்குத் தாங்கள் உதவுவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

உதவியளித்து இரு தொழிற்சாலைகளையும் துவங்குவதற்கு கிழக்கு ஜேர்மானியர்கள் மேற்கொண்ட இந்த முயற்சி தோல்வியடைந்து விட்டது என்று டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

டில்லி சர்க்கார், கிழக்கு ஜெர்மனி நிபுணர்களின் கருத்திக்கு உரிய மதிப்பளிக்கத் தயாரில்லை என்றும், அதனால் திட்டமான அறிவிப்பு எதுவும் இல்லை என்று சாக்குக் கூறுவதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனி வர்த்தகக் குழுவினர், பத்திரிகையாளரைக் கூட்டிவைத்து, தங்கள் சர்க்கார் உதவியளிக்கத் தயாராக இருப்பதைப் பகிரங்கமாக அறிவித்திருந்தும் கூட—தெளிவாகத் திட்டவட்டமாக விளக்கியிருந்தும் கூட, டில்லி சர்க்கார் வட்டாரங்கள், உதவியை ஏற்றுக்கொண்டு செயல்படுவதற்குமாறாக, திட்டமான அறிவிப்பு இல்லை என்று பொய் கூறுகின்றனராம்!

டெல்லி சர்க்கார் உற்பத்தி இலாகா அதிகாரி ஒருவர், "நாடு முழுவதையும் ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

ஆட்சியின் இலட்சணம்!

கல்லம்பூர், அக். 6—

தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் அறுவடை ஆரம்பமாகிவிட்டது; அவ்வாறிருந்தும், சம்பா பட்டணம் படி ஒரு ரூபாயாக விற்கப்படுகிறது; அந்த விலைக்குக்கூட அரிசி கிடைக்கவில்லையாம். மக்கள், பயிறு, பேரிச்சம்பழம், கொத்துக்கடலை ஆகியவைகளைத் தின்று வருகிறார்களாம்.

வேடிக்கையல்ல - வேதனை!

திருச்சி, அக். 6—

திருச்சி நகரில் நான்கு நியாய விலைக்கடைகளும், புதுக்கோட்டை பகுதியில் ஐந்து நியாய விலைக் கடைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்; அப்படியிருந்தும், அரிசி விலை உயர்ந்து வருகிறதாம்!

நம் நாடு

சென்னை • 10-10-'56 புதன்

முப்பதாண்டு குத்தகை!

[III]

பார்லிமெண்டரி சனநாயக முறை செவ்வனே நடைபெறுவதற்கும், ஆளும் கட்சியினர் மக்களை மதித்து நடக்க மறந்து ஆணவக்காரர்களாக மாறிவிடாமல் இருப்பதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தனி நபர்களின் உரிமைகள் பறிக்கப்படாமல் இருப்பதற்கும், பலம் பொருந்திய எதிர்க் கட்சி இருந்தாக வேண்டியது இன்றியமையாததாகும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தினோம். அனைத்திந்திய ரீதியில், ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சிக்கு எதிராகப் பலம் பொருந்திய எதிர்க்கட்சி உருவாகக்கூடிய சூழ்நிலை இன்று இருக்கவில்லை என்றக் குறைபாட்டையும் எடுத்துக்காட்டியிருந்தோம். சிறக,

பார்லிமெண்டரி சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்குப் பலம் பொருந்திய எதிர்க் கட்சி ஒன்று இருந்தாக வேண்டும் என்ற இன்றியமையாமையைக் காங்கிரசுக் கட்சியினரும் வற்புறுத்தாமல் இருப்பது கிடையாது. அவ்வாறு வற்புறுத்திக் கூறுவதில், இப்பொழுது காங்கிரசுக் கட்சி கொஞ்சம தீவிரம் காட்டவும் தொடங்கி இருக்கிறது.

எதிர்க் கட்சியின் தேவையை வாயளவில் தீவிரமாக வலியுறுத்திவரும் காங்கிரஸ் கட்சி, அத்தகைய எதிர்க் கட்சி உருக்கொள்வதற்கு எந்த அளவு செயலளவில் துணைபுரிகிறது என்பது ஆராயத்தக்கது. அவ்வாறு ஆராயுமிடத்து, காங்கிரசுக் கட்சியின் சொல்லுக்கும செயலுக்கும் இடையில் பெரும் பிளவு இருந்துவருவதையே நம்மால் காண முடிகிறது. அதைக் கொண்டு, எதிர்க் கட்சி வேண்டும் எனக் காங்கிரசுக் கட்சி பேசிவருவது வெறும் ஏமாற்று வித்தை என்றே முடிவு கட்டக்கூடிய கட்டாயத்திற்கு நாம் வர வேண்டியவர்களாகிறோம்.

பலம்பொருந்திய ஒரு எதிர்க் கட்சி உருவாவதற்குக் காங்கிரஸ் துணைசெய்ய முன்வரவில்லையானாலும், அதை ஒரு பெரிய தவருகக் கூறமுடியாது. ஆனல், தானாக ஒரு எதிர்க் கட்சி உருவாவதைக்கூடத் திட்டமிட்டுக் கெடுப்பதில் காங்கிரசுக் கட்சி தீவிரம் காட்டுவது மன்னிக்கக்கூடியதன்று.

சென்றப் பொதுத்தேர்தலின் போது சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஆட்சிப் பொறுப்பில் அமரக்கூடிய அளவில் காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை. மாற்றுக் கட்சிகளே கூட்டாகப் பெரும்பான்மை பெற்றிருந்தன. எதிர்க் கட்சி உருவாக்கப்படுவதைத் தனது அசைக்க முடியாத நோக்கமாகக் காங்கிரஸ் கொண்டிருக்குமானல், பெரும்பான்மை பெற்றுள்ள எதிர்க் கட்சியின் கூட்டணியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க இந்தியப் பேரரசை வற்புறுத்த காங்கிரஸ் மேலிடம் முன்வந்திருக்க வேண்டும். மாகாண ரீதியிலாவது, காலப்போக்கில் சிறந்ததோர் எதிர்க் கட்சி உருவெடுப்பதற்குக் கடைக்கால் போட்டதாக, அப்பெருஞ் செயல் அமைந்திருக்கக்கூடும்.

ஆனல் காங்கிரஸ் மேலிடம் என்ன செய்தது? இந்தியப் பேரரசு என்ற அமைப்பில் காங்கிரஸ் மேலிடம் புகுந்து கொண்டு, சென்னையின் ஆட்சிப் பொறுப்பும் தன்னிடமே இருக்கவேண்டும் எனத் தீர்மானித்துவிட்டது. அதன்படி சிறுபான்மையாக இருந்த காங்கிரசுக் கட்சி, ஆளும் பொறுப்பைப் பெற்றது.

அதன் பின்னர் மெள்ள மெள்ள, பஞ்சதந்திரங்களையும் கையாண்டு, கூட்டணியைக் குலைக்கும் பெரும் பணியில் காங்கிரஸ் ஈடுபடத் தொடங்கியது. வெள்ளை ஏகாதிபத்திய ரீதியில், பதவியைக் காட்டி எதிர்க் கட்சியை உடைத்துத் தனக்குப் பலம் தேடிக் கொள்வதில் காங்கிரசுக் கட்சி முழு வெற்றி பெற்றுவிட்டது.

காங்கிரசுக் கட்சி மேற்கொண்ட இந்த அவலட்சணப் போக்கால், இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சி ஒன்று உருவெடுப்பதற்கு இருந்த ஒரே ஒரு அரிய வாய்ப்பு பலனற்றுப் போய்விட்டது. எதிர்க்கட்சி உருவெடுப்பதில் காங்கிரசுக்கட்சிக்குள்ள ஆசையும் நல்லெண்ணமும் எத்தகையது என்பதை மெய்ப்பிக்க, இது ஒன்றே போதுமானதாகும். சிறக,

இருபதாண்டு அல்லது முப்பதாண்டுக் காலம் வரையில் காங்கிரசுக் கட்சியே ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்தால்தான், இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமை நிலைபேறுடையதாகும் என இந்தியப் பிரதமர் நேரு, தனது உள்ளக் கிடக்கையைக் காங்கிரஸ் ஊழியர்களிடை வெளிப்படுத்தியுள்ளார். அதுவுமன்றி, சமதர்ம அமைப்பு முறை வேரூன்றி கெட்டிப்படுவதும் அப்பொழுதுதான் சாத்தியமாகும் என்றும நேரு அறிவித்திருக்கிருர்.

வினவு எத்தகையதாக இருந்தபோதிலும், இந்தியத் துணைக்கண்டத்தை இன்னும் முப்பதாண்டுக் காலத்திற்குக் காங்கிரசுக் கட்சியே ஆண்டு வரவேண்டும் என இந்தியப் பிரதமர் நேரு உறுதியாக எண்ணி இருக்கிருர் என்பது விளக்கமாகிறது. இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது.

அதாவது, முப்பதாண்டுக் காலம காங்கிரசே ஆளவேண்டும் எனத் தீர்மானித்துவிட்ட பிறகு ஆட்சியைக் கைப்பற்றக்கூடியவகையில் வேறு ஒரு கட்சி உருவாவதற்குக் காங்கிரஸ் இடமளிக்காது என்பதுதான், நேருவின் ஆசையில் மறைந்து கிடக்கும் அந்த உண்மையாகும்.

இந்தியப் பிரதமர் நேரு விரும்புகிறபடி முப்பதாண்டுக் காலம் வரையில் இந்தியத் துணைக்கண்டத்தின் ஆளும் பொறுப்பு காங்கிரஸ் கட்சியிடமே இருந்து வரவேண்டுமானல், அக்கால அளவிற்குள் வேறு ஒரு எதிர்க்கட்சியும் உருவெடுக்க விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் அக்கட்சிக்கு இயல்பாக ஏற்பட்டு விடுகிறது. எனவே, எதிர்க்கட்சி எனத் தோற்றமளித்தாலே, அதை உடனடியாக உருக்குலைக்கக் காங்கிரஸ் எல்லா முறைகளையும் மேற்கொண்டே தீரும் என்பது சொல்லாமலே விளங்கிக் கொள்ளக் கூடியதாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தை இன்னும் முப்பதாண்டுக் காலம் வரையில் காங்கிரஸ் கட்சியே ஆண்டுவர வேண்டும் எனத் திட்டமிட்டு, அதற்காவன செய்துவரும் இந்தியப் பிரதமர் நேருவிடம், பார்லிமெண்டரி சனநாயக முறையின் வெற்றிக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என எதிர்பார்ப்பது வீணேயாகும். அதுவுமன்றி, சமதர்ம ஏற்பாட்டிற்குத் தாமே தத்துப்பிள்ளை என எண்ணிக் கிடக்கும் அந்தக் கனவானிடம், சனநாயக உரிமையை எதிர்பார்ப்பதும் பொருளற்றதாகும்.

தமிழ் நாட்டுக் கைத்தறியாளர் படும் அவதி!

சென்னை சர்க்கார் செய்யப்போவது என்ன?

மே.வ. சர்க்காரின் விற்பனைவரி விதிப்பு கைத்தறித் தொழிலைப் பாதிக்கிறது

முறையீடு கேட்ட மந்திரி செயல்படுவாரா?

சென்னை, அக். 8—

காலையில் எழுந்ததும், 'புதிய தொல்லை என்னவோ?' என்ற கலக்கத்துடன்தான் விழிக்க வேண்டிய பரிதாபகரமான நிலை, தமிழ் நாட்டுக் கைத்தறியாளருக்கு ஏற்பட்டிருக்கிறது.

தினம் தினம் ஏதேனும் தொல்லைகள், ஏற்கனவே சீர்குலைந்துள்ள அவர்களுடைய வாழ்வைத் தாக்குகின்றன! தாங்க முடியாத வேதனைக்காளாகின்றனர், கைத்தறியாளர்!

இப்போது புதிதாக ஒரு தொல்லை மேற்கு வங்க சர்க்காரால் கிளப்பப்பட்டிருக்கிறது.

1941-ம் ஆண்டில், விற்பனை வரி அமுலாகத் துவங்கிய நாளிலிருந்து சமீப காலம் வரை கைத்தறித் துணிகளுக்கு அவ்வரி விதிப்பிலிருந்து விலக்களித்து வந்திருக்கிறது மேற்கு வங்க சர்க்கார் 'இந்தக் கைத்தறித் தொழிலுக்கு எல்லாவகை உதவிகளையும் செய்ய வேண்டும்' என்ற மத்திய சர்க்காரின் கொள்கைக்கு இணங்கவே இந்த விலக்குத் தரப்பட்டு வந்தது.

ஆனல் திடீரென 'இந்த ஆண்டு ஏப்ரல் முதல் கைத்தறிக்கும் விற்பனை வரி விதிக்கப்படும்' என்று, மேற்கு வங்க சர்க்கார் சட்டத்தைத் திருத்திக்கொண்டிருப்பதின் பயனாகக் கைத்தறி விற்பனை வெகுவாய் பாதிக்கப்பட்டுவிட்டது.

ஆண்டொன்றுக்கு, மேற்கு வங்க மாநிலத்தில் சுமார் ரூ. 4 கோடி பெறுமானமுள்ள தமிழ் நாட்டுக் கைத்தறித் துணிகள் விற்பனையாகி வந்தன. இந்தச் சட்டத் திருத்தத்தால் துணி விலை ஏறுகிறது. அதனல் துணி வாங்குவோர், அதிக விலை தந்து கைத்தறித் துணி வாங்க மறுக்கின்றனர்! விளைவு — சரக்குகள் தேங்கிக் கிடக்கின்றன!

தமிழ் நாட்டுக் கைத்தறியாளர் பிழைப்பில் மண் தூவப்படுகிறது.

ஏற்கனவே பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்த மார்க்கெட்டுகள் முழுவதுமாகவும், மலாயா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்த மார்க்கெட்டுகளில் கணிசமானவற்றையும் — இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் போட்டிகளைச் சமாளிக்க முடியாமல் தமிழ் நாட்டுக் கைத்தறியாளர் இழந்துவிட்டனர்.

அதன் பிறகு ஏற்றுமதிக்கான துணிகளை நெய்வதற்கு மேற்கு வங்கத்தையே நம்பிக் கிடந்தனர்; இப்போது அதுவும் விற்பனை வரிவிதிப்பால் பாதிக்கப்படுகிறது என்பது, தமிழ் நாட்டுக் கைத்தறியாளரால் தாங்கிக் கொள்ள முடியாத வேதனையாகும்.

இந்த நிலைமைகளைத் தமிழ் நாட்டுக் கைத்தறியாளர் சார்பில் ஒரு தூதுக்குழு சென்னை மந்திரி பக்தவத்சலத்தைச் சந்தித்து எடுத்துரைத்திருக்கிறது.

'சென்னை சர்க்கார் உடனடியாக மேற்கு வங்க சர்க்காரை அணுகி, தொடர்ந்து கைத்தறி துணிக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கோரவேண்டும்'

என தூதுக் குழுவினர் வற்புறுத்தியிருக்கின்றனர்.

மேற்கு வங்கத்தில், கைத்தறித் துணிக்கு இப்போது ரூபாய்க்கு முக்காலணு விற்பனை வரி விதிக்கப்படுகிறதாம்.

சென்னை சர்க்கார் என்ன செய்யப்போகின்றனர்?

காங்கிரசுக்கு நல்ல எதிர்க்கட்சி வேண்டுமாம்

அப்படி எதிர்க்கட்சி எதுவும் இன்று இல்லையாம்

காங்கிரசுக்குள்ளேயே எதிர்க்கட்சி உருவாக வேண்டுமாம்

குல்லுகபட்டரின் குதர்க்கம்

திண்டுக்கல், அக். 7—

'நல்ல எதிர்க்கட்சி வேண்டும்' என்ற உயரிய வாசகத்தினை, காங்கிரசுக்குள்ளேயே 'கோஷ்டி'களை உருவாக்கிக் கொள்ளுவதற்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிருர், குல்லுகபட்டரான ஆச்சாரியார்!

'நல்ல எதிர்க்கட்சி ஒன்று இருக்கிறது என்ற பயம், காங்கிரசுக்கு இருக்கவேண்டுவது அவசியமாகும். அப்போதுதான் ஜனநாயகம் தழைக்கும்' என்று கூறிவிட்டு, நல்ல எதிர்க்கட்சியெனாகும் நிலையில் இப்போது எந்தக் கட்சியும் இல்லை என்று குதர்க்கம் பேசியிருக்கிருர் அந்தப் பெரியவர்!

பின், 'காங்கிரசுக்குள்ளேயே நல்ல எதிர்க்கட்சி உருவாகவேண்டும்' என்றும் கூறியிருக்கிருர் அவர்!

சில அடிப்படைக் கொள்கைகளில் காங்கிரசிலிருந்து வேறுபட்டதாயும், இதர அடிப்படைக் கொள்கைகளில் காங்கிரசுடன் ஒன்றுபட்டதாயும் அந்த எதிர்க்கட்சி—காங்கிரசுக்குள்ளேயே உருவாகும் எதிர்க்கட்சி இருக்கவேண்டுமாம்!

"ஆனாலும், அக்கட்சி காங்கிரசின் அடிப்படை இலட்சியத்தில் நம்பிக்கை கொண்டதாயிருக்க வேண்டும்; என்றாலும், காங்கிரசின் இன்றைய வழிமுறைகள் அனைத்திலிருந்தும் மாறுபட்டதாயிருக்க வேண்டும்; காங்கிரஸ் செய்யும் எதையும் கண்டிப்பதாகவோ, அல்லது எல்லாவற்றையும் ஆதரிப்பதாகவோ இருக்கக்கூடாது" என்று விசித்திரமானதோர் விளக்கத்தை அல்ல — குழப்பமான கருத்தை அறிவித்திருக்கிருர், ஆச்சாரியார்!

அவரது இந்தக் குழம்பிய வார்த்தைக் கோர்வைகளை உற்று நோக்கினல், 'நான் பதவியில் இல்லாவிட்டால் சர்க்கார் செய்கிற காரியங்களில் சிலவற்றையேனும்—எவர் கேட்டாலும் கேட்காவிட்டாலும்—எதிர்த்துக் கொண்டிருப்பேன்; ஏனென்றால் என்னைப் பதவியிலிருந்து தூக்கிவிட்டவர்களுக்கு நான் ஏதாவது தொல்லை தரவேண்டாமா? அதற்குத்தான்; ஆனாலும், நான் தருகிற தொல்லைகளுக்காக என்னைக் காங்கிரசிலிருந்து அடித்துத் துரத்திவிடக்கூடாது; அதற்காகத்தான், காங்கிரசுக்குள்ளேயே எதிர்க்கட்சி வேண்டும் என்கிறேன்,' என்ற பொருள் மட்டுமே பொதிந்து கிடப்பதைக் காணமுடியும்—என்று, ஆச்சாரியார் சமீப காலமாகப் பேசிவருவதை எல்லாம் கூர்ந்து கவனித்து வருபவர்கள் கூறுகின்றனர்.

'தமிழ் ஆட்சி மொழி ஆக வேண்டும்'

பி. டி. இராசன் முன்னெச்சரிக்கை

மதுரை, அக். 7—

"படிப்படியாகவும், நிலையான முறையிலும் தமிழ், ஆட்சி மொழி ஆகவேண்டும்.

"இந்த மாறுதலுக்கு அரசாங்க ஊழியர்களும் தங்களை தயார் செய்துகொள்ள வேண்டும். ஆட்சி முறைக்கான தமிழ்ச் சொற்களை அதற்கான தகுதி வாய்ந்த குழு ஒன்று விவாதித்து வகுக்கவேண்டும். இந்தத் தமிழ்ச் சொற்கள் எளிதானவையாகவும், சுலபத்தில் புரிந்துகொள்ளக் கூடியதாகவும், குழப்பமற்றதாகவும் இருக்கவேண்டும்."

என்று மதுரை—இராமநாதபுரம் அரசாங்க ஊழியர் சங்கத்தின் தமிழ் இலக்கிய சங்கத் துவக்க விழாவில் பேசுகையில் சர். பி. டி. இராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், 'நவம்பர் முதல் தேதியன்று முழுத் தமிழ் மாநிலம் அமைவதிலிருந்து தமிழை ஆட்சி மொழி ஆக்கவேண்டும்; ஆயினும் திடீரென்று கட்டாயமாக ஆட்சி மொழியை மாற்றம் செய்வதால் நிர்வாகம் அதிர்ச்சி அடையும் என்பதையும், குழப்பம் ஏற்படும் என்பதையும் என்னல் எச்சரிக்காமல் இருக்கமுடியவில்லை' என்று குறிப்பிட்டார்.

நாடெங்கும் திராவிட நாடு பிரிவினை (விடுதலை) நாள் விழாக் கூட்டங்கள்

செப்டம்பர் திங்கள் 17-முதல் 23 வரை தி. மு. கழகக் கிளைகள், கழகத் தொடர்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் அனைத்தும் திராவிட நாடு பிரிவினை நாள் விழா கொண்டாடுமாறு பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நாடெங்கிலும் கிளைக் கழகங்களும், கழகத் தொடர்புடைய நிறுவனங்களும் கொண்டாடியுள்ளன. இடமின்மையின் காரணமாகச் செய்திகள் அனைத்தும் சுருக்கித் தரப்பட்டிருக்கின்றன :—

சென்னை:

8-வது வட்டம் :

17—9—56 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. கழகக் கொடி ஏற்றப்பட்டது.

16-வது வட்டம் :

23—9—56 காலை 10 மணிக்கு, கழகப் பணிமனைக்கு அண்ணா அவர்கள் எதிர்பாராவிதமாக வந்து, கழக நிர்வாகிகளுடன் கழக நிர்வாகம் குறித்துப் பேசினார். கழகச் சார்பில் அமைக்கப்பட்ட 45 அடி உயரமுள்ள கொடிக் கம்பத்தையும் பார்வையிட்டுத் திரும்பினார்.

பகல் 11 மணிக்கு ஊர்வலம் நடைபெற்றது. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் கலந்துகொண்டார். 1 மணிக்கு ஊர்வலம் கழகப் பணிமனை அடைந்ததும், தோழர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

17-வது வட்டம் :

23—9—56 காலை 10 மணிக்கு தோழர் மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. 'இனி நமது கடமை' என்பது பற்றித் தோழர்கள் பலர் பேசினர்.

42-வது வட்டம் :

23—9—56 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் அ. பொ. அரசு தலைமையில் நடைபெற்றது. சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி, டி. வி. நாராயணசாமி, மற்றும் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

24-வது வட்டம் :

23—9—56 காலை $9\frac{1}{2}$ மணிக்கு, குயப்பேட்டை திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையிலிருந்து தோழர் மணி தலைமையில் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம், தி மு. கழகப் படிப்பகம் ஆகியவை சார்பில் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் தி. மு. கழகப் படிப்பகத்தை அடைந்ததும் தோழர் மணி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கழிஞ்சூர் :

24—9—56 இரவு 7 மணிக்கு தோழர் க. சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

இடைப்பாடி

23—9—56ல் வேலாயுதம்படிப்பகத்திலிருந்து தோழர் எ கே. கே. இராசமாணிக்கம் தலைமையில் ஊர்வலமும், பொது மைதானத்தில் விழாக் கூட்டமும் நடைபெற்றது தோழர் இரா. தாண்டவன் கழகக் கொடியேற்றினர்.

வத்தலக்குண்டு

23—9—56 மாலை கழக இல்லத்தில், தோழர் ஆர். பி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். இராமசாமி, முகதா பேசினர்.

கரிசல்பட்டி

23—9—56ல், விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இரவு 7 மணிக்கு மந்தைத் திடலில் தோழர் இராமசாமி தலைமையில் விழாப்' பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குத் தோழர் இரசாக் பரிசு வழங்கினர்.

அரசுநிலையம்

21—9—56 மாலை வ. உ. சி. திடலில், தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். கூட்டத்திற்குமுன் ஊர்வலம் நடைபெற்றது. பல பகுதிகளில் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன.

விருதம்பட்டு

23—9—56 காலை 10 மணிக்கு, தோழர் வி. மு. கரிகாலன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

இனும்கரிசல்குளம்

18—9—56 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு ஊர்வலம் நடைபெற்றது. தோழர் ஆ கருப்பையா கொடியேற்றி வைத்தார். தோழர் சு இராமசாமி பேசினர்.

பனைமடல்

21—9—56ல் ஊர்வலமும், இரவு $9\frac{1}{2}$ மணிக்கு தோழர் பா. துருவப்பன் தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது.

மூன்றுங்கட்டளை

20—9—56 மாலை 5 மணிக்கு ஊர்வலமும், 6 மணிக்கு தோழர் மு. ஆ. தாமோதரன் தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சத்திரப்பட்டி

24—9—56ல் சமுசிகாபுரத்திலிருந்து ஊர்வலமும், தோழர் க. இராமசாமி தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

குனியமுத்தூர் :

21-9-56 மாலை 7 மணிக்கு தோழர் கே. ஆர். சண்முகம் தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

ஆரணி :

23-9-56-ல், பொன்னேரி வட்டக் கழகச் சார்பில், ஆரணியில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

சேலம் :

20-9-56ல், 6-வது வட்டம் செவ்வாய்ப்பேட்டை கிளைக் கழகச் சார்பிலும், 21-9-56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு 3-வது வட்டம் சாமிநாதபுரம் கிளைக் கழகச் சார்பில் கழக முன்னிலையில் தோழர் பி. கே. சித்தையன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டமும், 23-9-56-ல் 4-வது வட்டம் அரிசிப்பாளையம் கிளைக் கழகச் சார்பிலும் விழா கொண்டாடப்பட்டது. 1-வது வட்டச் சார்பில் அன்று மாலை $6\frac{1}{2}$ மணிக்கு தோழர் வெ பெரியசாமி தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது.

கவுந்தப்பாடி :

23—9—56 காலை 8 மணிக்கு பெரியார் திடலிலிருந்து தோழர் புரட்சித்தம்பி தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, அய்யம்பாளையம், பொம்மன்பட்டி, நல்லிக்கவுண்டனூர், பெருந்தலையூர், மேட்டுப்பாளையம், புதூர், செந்தாம்பாளையம், கவுண்டம்பாளையம், சலங்கம்பாளையம், தர்மாபுரி ஆகிய ஊர்களுக்குச் சென்று பகல் $1\frac{1}{2}$ மணிக்கு பெரியார் திடலில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து தரப்பட்டது.

தளவாய்புரம் :

21—9—56 மாலை 6 மணிக்கு, தோழர் சி. மலைக்கனி தலைமையில் அண்ணா திடலில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

ஏனங்குடி :

17—9—56 காலை 8 மணிக்கு ஜனாப் அப்துல் சலாம் அவர்கள் கொடியேற்றி வைத்தார். கைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. சிறுருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இராசிபாளையம் :

27—9—56 மாலை 6 மணிக்கு, பிள்ளையார் கோயில் மைதானத்தில் தோழர் இரா. சு இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

இலக்குமணபுரி — (பெங்களூர்) :

23—9—56 காலை 11 மணிக்கு, தோழர் செ. வெங்கடசாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

அக்கிப்பேட்டை — (பெங்களூர்) :

23—9—56 காலை 10 மணிக்கு, தோழர் சி என். சாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

தாண்டானூர் :

28—9—56 மாலை 5 மணிக்கு, கழக இல்லத்தில், தோழர் எ. பெரியசாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

அருப்புக்கோட்டை :

17—9—56 மாலைகொடியேற்று விழாவும், 7 மணிக்குத் தியாகராய வாலிபர் சங்கத்தின் முன்பாக, தோழர் பி. பி. என். நல்லதம்பி தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

விருதுநகர் :

28—9—56 மாலை 4 மணிக்கு, முத்துராமன்பட்டி எம். ஜி. ஆர். மன்றத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தின்போது எம். எஸ். பி செந்திக்குமார் நினைவுப் படிப்பகம், சட்டையாபுரம் எம். ஜி. ஆர். ஒளியகம், செந்திராயகபுரம் தெரு, எம். எஸ். பெரியசாமி படிப்பகம் ஆகியவைகளில் கொடியேற்றி வைக்கப்பட்டது. $7\frac{1}{2}$ மணிக்கு தோழர் இலக்குமணன் தலைமையில், செல்லுக்கடை மைதானத்தில் விழாக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

'காமராசர் சர்க்கார் தமிழரின் நலன் காக்கத் தவறிவிட்டது'

'டில்லியிடம் உரிமையை எடுத்துரைக்கவே இல்லை'

செங்கோட்டை நகரசபைத் தலைவர் இடித்துரை

செங்கோட்டை, அக். 8—

"தமிழ் நாட்டிற்கும்—திரு-கோச்சிக்கும் உள்ள எல்லைச் சிக்கலில், சென்னை அரசாங்கம் தங்கள் உரிமைகளை தக்க முறையில் எடுத்துரைக்கத் தவறிவிட்டது.

"செங்கோட்டையின் வளமான தாலுகாக்கள் கேரளத்துடன் சேர, வறண்ட பகுதிகளே தமிழ் நாட்டுடன் இணைக்கப்படுகின்றன,"

என்று, செங்கோட்டை நகரசபைத் தலைவர் திரு. எம். சுப்பிரமணியம் அவர்கள் இலக்கிய அரங்கில் எடுத்துரைத்தார்.

இந்த இலக்கிய அரங்கை சென்னை விவசாய அமைச்சர் பக்தவத்சலம் துவக்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகத் திரை அகலுகிறது!

அணு ஆயுதங்களை உபயோகிக்க அமெரிக்கா தயங்காது!

ஆக்கிரமிப்பு நடைபெற்றால் தேவையான அளவு அணு ஆயுதங்களை உபயோகிக்கத் தயங்காது என்பதை அமெரிக்க விமானப் படை மந்திரி உறுதி செய்திருக்கிறார். இவரது பேச்சு சிலருக்கு இருந்த சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறது.

'யுத்தத்தில் இறங்குவது என முடிவு செய்துவிட்டால், அப்போது ஆக்கிரமிப்பைத் தடுக்க, நாம் அணு ஆயுதங்களையே நம்புவோம்' என்று அவர் கூறியிருக்கிறார்.

'ஆனால், அணு ஆயுதங்களை உபயோகிக்கும்போது, ஆக்கிரமிப்பில் நேரடியாக ஈடுபட்டிருப்போரை மட்டும் அழிக்கும் வகையில் அவற்றை எச்சரிக்கையுடன் உபயோகிப்போம்' என்றும் அவர் விளக்கம் கூறினாராம்.

'சிறு யுத்தத்தைப் பெரியதாக்குவது நமது நோக்கமல்ல. சிறு யுத்தம் விரிவாகாமலிருப்பதற்கே நாம் அணு ஆயுதங்களை உபயோகிப்போம், என்றும் அவர் ஒரு விசித்திர விளக்கமளித்திருக்கிறார்.

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்டோபர்

தேதி	ஊர்	நேரம்
12 :	காஞ்சிபுரம்	.... காலை 9 மணி
,,	வேலூர்	.... மாலை 6 ,,
13 :	திருப்பத்தூர்	.... காலை 9 ,,
,,	கிருஷ்ணகிரி	.... மாலை 6 ,,
14 :	சேலம்	.... காலை 9 ,,
,,	ஈரோடு	.... மாலை 6 ,,
15 :	கோயமுத்தூர்	.... காலை 9 ,,
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6 ,,
16 :	கரூர்	.... காலை 9 ,,
,,	திருச்சி	.... மாலை 6 ,,
17 :	திண்டுக்கல்	.... காலை 9 ,,
,,	பெரியகுளம்	.... மாலை 6 ,,

அக்டோபர்

தேதி	ஊர்	நேரம்
18 :	மதுரை	.... காலை 9 மணி
,,	விருதுநகர்	.... மாலை 6 ,,
19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,
,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,
20 :	ஓய்வு	
21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,
22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,
,,	தஞ்சை	பிற்பகல் 3 ,,
,,	மாயவரம்	.... மாலை 6 ,,
23 :	கடலூர்	.... காலை 9 ,,

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தென்னிந்திய வர்த்தக சபை கோரிக்கை

மத்திய வானொலி நிலையம் ஏற்றுச் செயலாற்றும்?

சென்னை, அக். 8—

அகில இந்திய வானொலியில் வர்த்தகங்களை ஒலிபரப்பும்படி தென்னிந்திய வர்த்தக சபை மத்திய வானொலி இலாகாவிடம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போது ஏராளமான பணம் இலங்கை வானொலிக்குப் போகிறது

இந்தக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதின் மூலம் இந்திய வானொலிக்கு நிறையப் பணம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பிறப்பு

மறைந்த ஆசிரியர் உடையார்பாளையம் வேலாயுதம் அவர்களின் புதல்வியார் திருமதி மங்கையர்க்கரசி—இராமச்சந்திரன் அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்ததின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி —பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

30-9-56ல், கீழமங்கலம் தோழர் சுப்பிரமணியம் அவர்களின் மகளுக்கு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'மல்லிகா' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஆச்சாரியார் குரலில் உறுதி தொனிக்கிறது!

‘ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்’

‘இந்தி திணிக்கப்படக் கூடாது’

‘தமிழருக்கு அநீதி இழைக்கக் கூடாது’

மதுரை, அக். 8—

இந்தி, தமிழ் நாட்டில் திணிக்கப்படுவதை எதிர்த்து மீண்டும் ஆச்சாரியார் உறுதியான குரலில் பேசியிருக்கிறார்.

"இந்தி திணிக்கப்படுவது தமிழருக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்' என்றும் அவர் கண்டிப்புடன் பேசியிருக்கிறார்.

"ஒரு மாநிலத்தில் வழங்கப்படும் மொழியே அந்த மாநிலத்தின் அரசாங்க மொழியாக இருக்க வேண்டும்.

"ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்குமிடையே தொடர்பு கொள்ளவும், ஒரு மாநிலம் மத்திய சர்க்காருடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கவேண்டும்; ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியைத் திணிக்கக்கூடாது" என்று ஆச்சாரியார் வரையறுத்துக் கூறியிருக்கிறார்.

'மொழிப் பிரச்சினை' பற்றி மாணவர் கூட்டம் ஒன்றில் பேசிய ஆச்சாரியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :—

"இந்தி இந்தியாவில் பெரும்பான்மையினரால் பேசப்படுகிற மொழியாக இருந்தபோதிலும், இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி ஆக்கப்படக்கூடாது. நிர்வாகத்தைப் பொறுத்து, துரிதமாகவும் திறமையாகவும் காரியங்கள் நடைபெறவேண்டியது மிக முக்கியமாகும்.

"இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்படுமானால் தமிழர்களுக்கு—கடந்த 200 ஆண்டுகளாக ஆங்கிலம் பயின்றுவரும் தமிழர்களுக்கு அது நியாயம் வழங்குவதாகாது.

"தங்களுக்குத் தெரியாத இந்தி மொழியில் காரியங்களைச்செய்ய வேண்டுமென தமிழர்களுக்குக் கூறப்படுமானால், அது அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

"ஒரு பெருந்தொகுதி மக்களுக்குப் பிரதிகூலங்களை விளைவிக்கக்கூடிய வகையில் ஒரு மொழியை அவர்கள் மீது திணிப்பது புத்திசாலித்தனமானதல்ல!

"இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுமானால், தமிழர்களுக்கு பெரும் பிரதிகூலங்கள் ஏற்படும்.

"நாம் ஆங்கில அறிவு பெற்றிருப்பது, வெளிநாட்டு ஆட்சியின் விளைவு என்பதில் சந்தேகமே இல்லை; ஆனால் வெளிநாட்டு ஆட்சியின் விளைவு என்பது வெளிநாட்டு ஆட்சி என்பதிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும்."

தொடர்ந்து பேசிய ஆச்சாரியார், ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவின் ஆட்சிமொழி ஆக்கப்படவேண்டும் என்று தகுந்த காரணங்களுடன் வலியுறுத்திவிட்டு தாய்மொழியிலேயே கல்லூரிக் கல்விவரை போதிக்க முடியும் என்றும், தாய் மொழியில் விஞ்ஞானக் கல்வி தரப்பட முடியாது என்று கூறுவதைத் தான் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வடவரின் ஏகாதிபத்திய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சேரக் கவனித்தால், இரும்புத் தொழிற்சாலை துவங்குவதுபோன்ற விவகாரங்களில் நாம் மிகச் சிக்கன மனப்பான்மை யுடையவர்களாயிருக்க வேண்டும்; ஏனெனில், சேலத்தில் கிடைப்பதைவிட வளமான இரும்புக் கனிகள், நிலக்கரி கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே நாட்டின் இதர பகுதிகளில் (வடநாட்டில்?) கிடைக்கின்றன; எனவே, அந்த இடங்களில் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் துவங்குவதே இந்தியாவின் பொருளாதார நிலைக்கு உகந்ததாகயிருக்க முடியும்; சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்குவதில் பல கஷ்டங்கள் அடங்கியுள்ளன"

என்று கூறியிருப்பதாக 'மெயில்' நிருபருக்குத் தெரியவந்துள்ளதாம்.

தென்னாட்டில் தொழிற்சாலை துவங்குவதில் வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கிஞ்சிற்றும் விருப்பமில்லை என்பதால், அயல் நாட்டு நிபுணர்களின் கருத்தையும், உதவியையும்கூட ஏற்க மறுத்துவிடுகிற கீழ்நிலைக்கு அவர்கள் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னையுடன் இணையும் தி. கொ. தமிழ்ப் பகுதிகள்

நாகர்கோவிலில் விழா

சென்னை, அக். 8—

கன்னியாகுமரி உட்பட திருகொச்சியிலுள்ள 5 தமிழ் தாலுகாக்கள் சென்னை மாநிலத்துடன் நவம்பர் முதல் இணைக்கப்படும்; இதற்கான விழா நாகர்கோவிலில் நடைபெறும்; விழாவில் சென்னை முதலமைச்சர் காமராசர் கலந்துகொள்வார்.

இப்போதைய ஏற்பாட்டின்படி இந்தத் தமிழ்ப் பகுதிகள் 'கன்னியாகுமரி மாவட்டம்' என்ற பெயரில் ஒரு தனி மாவட்டமாக இருக்கும்.

இந்தி மொழி பேசும் மக்களுக்கு அறிவுரை

போபால், அக். 6—

'வட இந்தியப் பல்கலைக் கழகங்களில் தென்னிந்திய மொழிகளையும் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று விந்தியப் பிரதேச முதலமைச்சர் எஸ். என். சுக்லா, போபால் இந்தி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள்—மாணவர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் பிரதிபலனை எதிர்பார்க்காதவகையில் இந்தி மொழியைப் பரப்ப வேண்டும் என்றும், இந்தி மொழி பேசும் மக்கள் மற்ற மொழிகளையும் மனத்தயக்கமின்றி கற்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

திருச்சி விசுவநாதம் :

கொழும்பு திருக்குறள் மன்ற விழாவில் பங்குபெற இலங்கையிலிருந்து வந்துள்ள அழைப்பை ஏற்றுக்கொண்டு திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், நவ. 2-ந்தேதியன்று விமானம் மூலம் இலங்கைக்குப் பயணமாகலாம் என்று தெரிகிறது.

கோவை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட விவரப்படி தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும் :—

"காங்கயம், சென்னிமலை, ஈரோடு, பெருந்துறை, பவானி, கோபி, நம்பியூர் ஆகியதொகுதிகளுக்கு 14—10—56 மாலை 6-மணிக்கு, ஈரோடு பழைய இரயில்வே ஸ்டேஷன் கரூர் ரோடு வெங்கட நாய்க்கர் சத்திரத்திலும் ;

"திருப்பூர், பல்லடம், கோவை, கோவை ரூரல், சூலூர், அவிநாசி, மேட்டுப்பாளையம் ஆகிய தொகுதிகளுக்கு 15-10-56 காலை 9-மணிக்கு, கோவை முனிசிபல் டிராவலர்ஸ் பங்களாவிலும் ;

"உடுமலை, பொள்ளாச்சி, கோவில்பாளையம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு 15-10-56 மாலை 6மணிக்கு, உடுமலை டிராவலர்ஸ் பங்களாவிலும் நடைபெறும்.

"கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வலர்களும் தவறாது வருகைதந்து தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்"

—என்று, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்.

சேலம் மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

"சேலம் மாவட்டம், தர்மபுரி கிருஷ்ணகிரி, அரூர் வட்டங்களைச் சார்ந்த கிளைக் கழகத் தோழர்கள், தேர்தல் ஆய்வுக் குழுவினரை கிருஷ்ணகிரியில் 13-10-56 மாலை 6 மணிக்குச் சந்திக்குமாறும் சேலம், ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல், திருச்செங்கோடு, ஓமலூர் ஆகிய வட்டங்களைச் சார்ந்த கிளைக் கழகத் தோழர்கள் சேலத்தில், சித்தேசுவரா சினிமாக் கொட்டகையில் 14-10-56 காலை 9 மணிக்குச் சந்திக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

தூளை நகர இளைஞர் கழகம்

12-வது சுகாதார வாரம் —11-10-56 மாலை 6-30 மணிக்கு இந்து யூனியன் கமிட்டி உயர்நிலைப் பள்ளியில் தாய்மார்கள் தினமும், குழந்தைகள் போட்டியும் நடைபெறும். டாக்டர் சி. என். ருக்மணி தலைமையில தோழியர் டி. எஸ் குஞ்சிதம்—குருசாமி பேசுவார்.

மேற்கு வல்லரசுகளுக்கு மாபெரும் தோல்வி!

சூயஸ் தகராறு தீர சமரச ஏற்பாடு?

சூயஸ் தகராறு ஏதாவது ஒரு சமரச ஏற்பாட்டின் மூலம் தீர்க்கப்பட்டுவிடும் என்று பிரெஞ்சு அரசியல் வட்டாரங்களும், பத்திரிகைகளும் கருதுகின்றனவாம்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் இரகசியக் கூட்டத்தில் தகராறு விவாதிக்கப்படுகையில், பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்று, ஐ. நா.-வில் சமரசத்திற்கான உறுதிமிக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

எகிப்திய வெளி விவகார மந்திரி முகம்மது பாவ்ஜியுடன் அமெரிக்க மந்திரி டல்லஸ் நியூயார்க்கில் நடத்திவரும் இரகசியப் பேச்சுவார்த்தைகளே, பிரெஞ்சு வட்டாரங்களின் இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாம்.

பிரச்சினை முடிந்துவிட்டது!

ஐ. நா.-வில் நடைபெறும் விவாதங்கள், ஏறத்தாழ பிரச்சினைக்கு முடிவு கண்டுவிட்டதாகவே கூறுகின்றனவாம்.

தோல்வி!

சூயஸை சர்வதேசியமயமாக்கும் மேற்கு வல்லரசுகளின் திட்டத்தை ரஷ்யா தனது ரத்து அதிகாரங்கொண்டு நிராகரித்துவிடுமானால், மீண்டும் பேச்சுவார்த்தைகளின் மூலம் பரிகாரம்தேடுவதைத் தவிர மேற்கு வல்லரசுகளுக்கு வேறு வழியில்லை என்று கூறப்படுகிறது.

பிரிட்டனும்—பிரான்சும் துவக்கத்தில், பலாத்காரம் உபயோகிக்கப் போவதாக என்னதான் உரத்துக் கூவியிருந்தாலும், இப்போது வளர்ந்துவிட்ட நிலைகளில், அவை ஒரு யுத்தத்தில் இறங்கமாட்டா என்பது நிச்சயமாகும் என்று, பார்வையாளர்கள் கருதுகின்றனராம்.

ஷெப்பிலாவ் குற்றச்சாட்டு

ஐ. நா.-வில் பேசிய ரஷ்ய மந்திரி ஷெப்பிலாவ், மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் மேற்கு வல்லரசுகள், தங்களின் முப்படைகளையும் குவித்திருப்பதை அளவிட்டுக் காட்டிக் கண்டனம் எழுப்பியதாகவும் கூறப்படுகிறது.

ஜெயப்பிரகாஷ் நாராயண் பிறந்த நாள் விழா

11-10-56 மாலை 5½ மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில், சென்னை மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் சார்பில், தோழர் ஜி. இராசமன்னார் தலைமையில், ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் வி. கே. ஜான் எம் எல். சி., என். சிவரத்தினம், எஸ். ஏ. ரகீம், வி. ஆர் இராதாகிருஷ்ணன், எஸ் டி. சுந்தரம், தோழியர் எஸ். விசயலட்சுமி ஆகியோர் பேசுவர்.

நசுக்குவோம்!

இதற்கிடையில், 'ஆக்கிரமிப்பு எந்த வகையில் உருவானாலும் அதனை நசுக்கிவிடக் கூடிய ஆற்றலை, எகிப்து நிச்சயம் பெற்றிருக்கிறது', என்று நாசர், கெய்ரோவில் முழக்கமிட்டிருக்கிறார்.

ஆய்வுக்குழு தங்கும் இடங்கள்

★

காஞ்சிபுரம்	.... நகராட்சி தங்கும் விடுதி (இரயில்வே ரோடு அருகில்)
வேலூர்	.... டவுன் ஹால்
திருப்பத்தூர்	.... 58, சின்னக்கடை வீதி
சேலம்	.... சித்தேசுவரா சினிமா தியேட்டர்
ஈரோடு	.... கரூர் ரோட், வெங்கட நாய்க்கர் சத்திரம்
கோவை	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி (Travellers' Bungalow)
கரூர்	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
திருச்சி	.... முனிசிபல் சத்திரம்
விருதுநகர்	.... முசாபரி பங்களா
நாகர்கோயில்	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
பட்டுக்கோட்டை	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
மாயூரம்	.... முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
கடலூர் N. T.	.... முசாபரி பங்களா

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

இறக்குமதியை கட்டுப் - படுத்த யோசனை

அயல் நாட்டுச் செலாவணியில் பற்றுக்குறை ஏற்படுமா?

சென்னை, அக். 9—

ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகரித்து, இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலமே வெளிநாடுகளிலிருந்து இந்தியா பெறும் சாதனங்களுக்கு ஈடுசெய்ய முடியும் என்றும், அப்போதுதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறும் என்றும், தமிழ் வர்த்தக சபையில் இறக்குமதி — ஏற்றுமதி கண்ட்ரோலர் பில்கிராமி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 1,200 கோடி அயல் நாட்டுச் செலாவணி வசதியில் பற்றுக்குறை ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

பாதுகாவலுக்குச் சென்ற போலீஸ்காரர்

திடீரெனப் பொதுமக்கள் மீது 12 முறை சுட்ட விந்தை

பதேகார், அக். 8—

பதேகார் பகுதியில் பணச் சாலையைப் பாதுகாக்க அனுப்பப்பட்ட போலீஸ்காரர், தன் இடத்தை விட்டுத் திடீரென்று, தசரா கேளிக்கை நடைபெற்றுக்கொண்டிருந்த ரமீல்லா மைதானத்திற்கு வந்து பொதுமக்கள்மீது 12 முறை சுட்டதாகவும், அதனால் ஒருவர் இறந்ததாகவும், பலருக்குக் காயமேற்பட்டதாகவும், துப்பாக்கியுடன் போலீஸ்காரர் தப்பிவிட்டதாகவும் தெரியவருகிறது.

கால் பந்தாட்டக்காரர்கள் கொலையுண்டனர்

கம்யூனிஸ்டு கலகக்காரர்களின் வெறிச் செயல்

இரங்கூன், அக் 9—

பர்மா இராணுவக் கால் பந்தாட்டக் குழுவைச் சேர்ந்த 8 பேர்களை இரங்கூனுக்கு வடக்கே 120 மைல் தூரத்தில் கம்யூனிஸ்டு கலகக்காரர்கள் வளைத்துப் பிடித்துக் கொன்றுவிட்டனர் என்றும், மற்ற மூன்று பேர் காணவில்லை என்றும், அவர்கள் ஏறிச் சென்ற லாரியும் கொளுத்தப்பட்டதென்றும் தெரியவருகிறது.

அந்தச் சமயத்தில் அங்குவந்த பிரயாணிகள் இரயிலையும் நிறுத்தித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

மத்திய பர்மாவில் கலகக்காரர்கள் ஒரு பிரயாணிகள் இரயிலில் நுழைந்து ரூ 1 இலட்சத்திற்கு மேற்பட்ட ரொக்கத்தையும், நகைகளையும் எடுத்துக்கொண்டு ஜன்னல் வழியே குதித்து ஓடிவிட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.